பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 08 திங்கட்கிழமை (24-07-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 241

# தமிழீழ விடுதலைப் போராட்ட நிதிக்கு ரூ.100 கோடி பங்களிப்புத் தேவை!

## நிதிப் பொறுப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 24

விடுதலைப் போராட்டத்தை விரைவுபடுத்தி விடுதலையை வென்றெடுக்க நூறுகோடி ரூபா நிதி உடனே தேவைப்படுகின்றது.

வர்த்தகர்களும், பொதுமக்களும் தமது வரலாற்றுக் கடமையை உணர்ந்து, தாங்களாகவே முன்வந்து வாரி வழங்கி விடுதலையை விரைவு படுத்த வேண்டும்.

இந்த நிதிக்குப் பங்களிப்புச் செய்யும்படி நாம் யாரையும் வற்புறுத்தப் போவதில்லை. மக்கள் தாமாகவே நிலைமையை உணர்ந்து முன் வந்து உதவ வேண்டும்.



தமிழேந்தி

— இவ்வாறு கோரியுள்ளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி.

வலிகாமம் பகுதியில் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரிவு வரிசெலுத்துவோருக்கான விளக்கக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நேற்றுக் காலை 10-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு பெரும் எண்ணிக்கையில் வரி செலுத்துவோர் திரண்டு வந்திருந்தனர். அங்கு விளக்கமளிக்கையில் நிதிப்பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி மேலும்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வுத்திட்டம் முன்வைக்கும்போதே இடைக்கால சபையும் அமைக்கப்படும்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

"அதிகாரப் பரவலாக்கல் திட்ட யோசனைகளை முன்வைக்கும் போதே வடக்கு—கிழக்கு மாகாணத்துக்கான இடைக்கால நிர்வாக சபையும் ஏற்படுத்தப்படும்.''

இவ்வாறு தெரிவித்துள்ளார் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ்.

கடந்த புதன்கிழமை இரவு ஈ. பி. டி. பி, புளொட் ஆகியவற்றின் தலைவர்களை அவசரமாக அழைத்து அமைச்சர் அவர்களுடன் பேச்சு நடத்தினார்.

அப்போதே அவர் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை முன்வைக்கவுள்ள இந்த வேளையில் தமிழ்க் கட்சிகள் அரசில் இருந்து தூர விலகுவது சிங்கள இனவாத சக்திகளுக்கு உந்துதல் அளிப்பதாகவே அமையும்—

(2 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல்வாதிகளின் வெறும் திட்டமே "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கை

## முன்னாள் விமானப்படைத் தளபதி கண்டனம்

கொழும்பு, ஜூலை 24

"இராணுவ விடயத்தில் அனுபவமுள்ள அதிகாரிகளை ஒதுக்கிவிட்டு, அரசியல்வாதிகள் தங்கள் விருப்பு வெறுப்புகளைப் பூர்த்தி செய்வதற்கு யுத்தத்தைப் பயன்படுத்துகின்றனர். அதனால் மனித உயிர்கள் பலியாவது மட்டுமே பலன்.''

"முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கை குறித்து பி.பி.சிக்கு கருத்து வெளியிடுகையில் முன்னாள் விமானப் படைத் தளபதி ஏயர் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக இவ்வாறு குறிப்பிட்டார்.

"முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கையின் போது கைப்பற்றிய பிரதேசங்களிலிருந்து இராணுவம் விலகவில்லை என இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க நேற்றும் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ள போதிலும் —

( 5 ஆம் பக்கம் பார்க்க)

## "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கை:

# உண்மை நிலை குறித்து அரசின் அறிக்கை தேவை

## ரணில் வற்புறுத்துகிறார்

கொழும்பு, ஜூலை 24

"முன்னேறிப் பாய்தல்" ராணுவ நடவடிக்கையின் தற்போதைய நிலை குறித்து அரசாங்கம் பூரண அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என்று—

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தி உள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை

[ 2 ஆம் பக்கம் பார்க்க]

# உலகத் தமிழினத்தின் வரலாற்று நாயகன் பிரபா

## தமிழேந்தி புகழாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

உலகத் தமிழினத்தின் வரலாற்று நாயகன் தலைவன் பிரபாகரன்.

— இவ்வாறு புகழாரம் சூட்டினார் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி.

நேற்றுக்காலை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற விளக்கக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தலைவர் பிரபா குறித்து அங்கு அவர் கூறியதாவது:

தலைவர் பிரபாகரனின் மிகச் சிறந்த தலைமை தமிழினத்துக்குக் கிடைத்துள்ளது.

தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளும் கொடுமைகளுமே பிரபாகரன் என்ற தலைவன் தோற்றுவதற்கான தேவையை ஏற்படுத்தியது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

# விமானம் ஒன்றை வீழ்த்த 50 லட்சம் ரூபா செலவு!

## நிதிப் பொறுப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

போர் விமானம் ஒன்றைச் சுட்டு வீழ்த்த 50 லட்சம் ரூபா தேவைப்படுகிறது.

தமிழீழ நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி இத் தகவலைத் தெரிவித்தார். நேற்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இத் தகவலை வெளியிட்டார்.

போராட்டத்துக்கு ஆட்பலமும் பெருமளவு நிதியும் தேவைப்படுகின்றன.

சாதாரண ரவை ஒன்றுக்கு ஆறு முதல் எட்டு ரூபா வரை செலவாகிறது.

ஆர். பி. ஜி. ஷெல் ஒன்றின் பெறுமதி 6 ஆயிரம் ரூபா.

ஏ. கே. ரகத் துப்பாக்கி ஒன்றின் விலை 15 ஆயிரம் ரூபா. ஆர். பி. ஜி. ஒன்றின் விலை 80 ஆயிரம் ரூபா.

இத்தனைக்கும் பணம் தேவை. இந் நிலையில் தமிழர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தாமே உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

போதிய ஆட்பலமும், நிதியும் தேவைப்படுகிறது. இவை இரண்டும் நிறைவேற்றப்பட்டால் விடுதலை விரைவில் கிட்டும் — என்றார் தமிழேந்தி.

# வாழைச்சேனையில் மூவர் பொலீஸாரின் சூட்டுக்குபலி

கொழும்பு, ஜூலை 24

வாழைச்சேனைப் பகுதியில் கடந்த புதனன்று மாலை பொலீஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தமிழர்கள் மூவர் உயிரிழந்தனர். மேலும் மூவர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விநாயகபுரம் அகதி முகாமில் தங்கியிருந்த சு. குமாரசாமி (வயது 24), கறுவாக்கேணியைச் சேர்ந்த வ. செல்லத்தம்பி (வயது 60), ஏழு பிள்ளைகளின் தாயான செ. யேசுமேரி (வயது 45) ஆகிய மூவருமே கொல்லப்பட்டவர்களாவர்.

இவர்களில் குமாரசாமி என்ற இளைஞர் காயமடைந்த நிலையில் உறவினர்களால் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுகையில் வழி

(2 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்ப் பெண்ணும் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 24

கொழும்பில் அங்கிலிக்கன் திருச்சபையின் தேசிய கிறிஸ்தவ மன்றத்தில் பணிபுரிந்த தமிழ்ப்பெண் ஒருவரையும் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அமெரிக்க பிரஜையான கெனத்மர்டோன் கொழும்பு நீதிமன்றத்தில் இன்று ஆஜர் செய்யப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

வெடிப்பொருள்களை வட பகுதிக்கு கடத்தி செல்ல முயன்றார் என்ற சந்தேகத்தின்பேரில் இவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ விடுதலைப் போராட்ட....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] கூறியதாவது:

இந்த மண்ணில் இருந்து தமிழர்களை அடியோடு ஒழித்துக்கட்ட இந்த அரசு எடுத்துவரும் சகல நடவடிக்கைகளையும் நீங்கள் அறிவீர்கள்; உங்கள் கண்முன்னே அவை நடக்கின்றன.

இந் நிலையில் தமிழர்கள் புரிய வேண்டிய வரலாற்றுக் கடமை பற்றிக் கூறுவதற்காக உங்களை அழைத்துள்ளோம்.

அண்மையில் இராணுவம் மேற்கொண்ட ''ஒப்பரேசன் லீப் போவேட்'' நடவடிக்கையில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதும்—

உடுத்த உடையுடன் லட்சக்கணக்கான மக்கள் ஏதிலிகளாக இடம் பெயர்ந்து போனதும் தெரிந்ததே.

தனது ஒருவயதுக் குழந்தையைக் கூடத் தூக்க முடியாது கைவிட்டு தாயும்,—

வயோதிபத் தந்தை பட்டினியால் இறப்பதற்கு கைவிட்டு பிள்ளைகளும் —

நிர்க்கதியான நிலையில் வெளியேறிய பல பரிதாபகரமான சம்பவங்களை நாம் கண்டுள்ளோம்.

கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான மக்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

இந்நிலை ஏன் ஏற்பட்டது? விடுதலைப் புலிகள் ஏன் இராணுவத்தைத் தடுத்து நிறுத்தவில்லை என்று சிலர் கேட்கின்றனர்.

### சுற்றிவளைப்பு

45 ஆயிரத்துக்கு மேற்பட்ட சிப்பாய்கள் குடாநாட்டைச் சுற்றி வளைத்து நிற்பதாக செய்திகள் வெளிவந்திருப்பது உங்களுக்குத் தெரியும்.

பலகோடி ரூபா செலவிட்டு யுத்த ஆயுதங்களை வாங்கி ஸ்ரீலங்கா அரசு குவித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு நிதி என்ற பெயரில் அரசு பல கோடி ரூபாவைத் திரட்டி வருகிறது.

தமிழர்களின் விடுதலைப் போரை ஒடுக்குவதற்கு என்றே — அழித்து ஒழிப்பதற்கு என்றே — பாதுகாப்பு வரியையும் அமுல்படுத்தியுள்ளது.

ஆனால் அரசின் போர்ச் செலவுகளுக்கு இவை போதவில்லை; நிதி நிலையை ஈடு செய்யவில்லை.

இவை போதாதென்று தமிழ் இன அழிப்புக்காகத் தனியார் துறையினரிடம் இருந்தும் நிதி பெறப்படுகிறது.

இது தவிர, ஸ்ரீலங்கா வங்கிகளில் வைப்பிடப்படும் தமிழர்களின் செல்வம் கூட, தமிழர்களுக்கு எதிரான யுத்தத்துக்கு என ஆயுதங்களை வாங்கப் பயன்படுத்தப்படுகின்றது.

இந் நிலையில் தமிழர்கள் செய்யவேண்டியது என்ன?

ஆயுதப் போராட்டத்தினால்தான் இச் சூழ்நிலை ஏற்பட்டதா? இல்லை.

கடந்த கால தமிழின வரலாற்றைப் பார்த்தால் இது புரியும்.

### வரலாறு

காலம் காலமாக தமிழர்கள் அடிமைப்படுத்தப்பட்டு வந்ததன் — அடிவாங்கி வந்ததன் — தொடர்ச்சியே தற்போதைய சூழ்நிலை.

1948இல் ஸ்ரீலங்கா சுதந்திரம் பெற்ற காலம் முதல் தொடர்ச்சியாக தமிழர்கள் அடிமைப் படுத்தப்பட்டனர்; அழிக்கப்பட்டனர்.

1949 ஆம் ஆண்டு லட்சக்கணக்கான மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது.

1956 இல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டு தமிழ்மொழி இரண்டாம் தர மொழியாக்கப்பட்டு தமிழர்கள் இழிவு படுத்தப்பட்டனர்.

1958 இல் [சிங்கள ''ஸ்ரீ'' யை எதிர்த்து தமிழர்கள் நடத்திய அகிம்சைப் போராட்டம் ஆயுத வழியில் அடக்கப்பட்டது; தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

1961 ஆம் ஆண்டில் யாழ். கச்சேரி முன்பாக அறவழியில் தமிழர்கள் நடத்திய போராட்டத்தை அரசு எவ்வாறு அணுகியது என்பது தெரிந்ததே.

1970 இல் தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களின் கல்வி வாய்ப்பைப் பறிக்கும் முறை புகுத்தப்பட்டது.

1974இல் தமிழ் மக்கள் தமது மொழிக்கு தமது மண்ணில் விழா எடுக்க முடியாது தடுக்கப்பட்டனர். அதில் பல தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

அதன் பின்னர் 1977இல் ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசு "போர் என்றால்போர்; சமாதானம் என்றால் சமாதானம்'' எனக் கூறி தமிழ் மக்கள்மீது போர் தொடுத்தது.

தொடர்ந்து நடந்த தமிழின அழிப்பு நடவடிக்கைகள் அனைவரும் அறிந்ததே.

### நூலகம் எரிப்பு

தென்னாசியாவிலேயே மிகச் சிறந்த நூலகம் யாழ்ப்பாணத்தில் சிங்களப் படைகளால் 1981 இல் தீக்கிரையாக்கப்பட்டது.

இச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்த பன்மொழிப் புலவர் தாவீது அடிகள் சாவைத் தழுவிக் கொண்டார்.

இவை எல்லாம் தற்போதைய ஆயுதப் போராட்டத்தின் விளைவுகள் அல்ல. அகிம்சை வழியில் தமிழர்கள் போராட்டம் நடத்திய காலத்தில் நடந்தவை.

இன்று தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் இன அழிப்பு— அவர்கள் ஆயுதங்கள் மூலம் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்த காலத்துக்கு முன்னிருந்தே தமிழர்கள் அடிமைப்படுத்தப்பட்டு வந்ததன் தொடர் வெளிப்பாடே தவிர, இன்றைய ஆயுதப் போராட்டத்தின் விளைவு அல்ல.

### அழிவின்றி விடுதலை வராது

உலகில் விடுதலைக்காகப் போராடும் இனங்கள் அழிவுகளைச் சந்தித்துத்தான் விடுதலை பெற்றன.

எதியோப்பிய அரசுக்கு எதிராக எரித்திரிய மக்கள் 30 வருடங்கள் போராட்டம் நடத்தினர். அங்கு பல்லாயிரம் மக்கள் பட்டினியால் இறந்தனர்.

பின்னர் கடந்த 93ஆம் ஆண்டில் எரித்திரியா சுதந்திர நாடானது.

வியட்நாமியர்களும் இவ்வாறே நீண்ட காலம் போராட்டம் நடத்தினர். பெரும் அழிவுகள், இழப்புகளைச் சந்தித்த பின்னரே அமெரிக்காவிடமிருந்து அவர்கள் விடுதலை பெற்றனர்.

துன்பங்கள் இல்லாமல் விடுதலை வந்துவிடாது என்பதையே வரலாற்றின் பாடங்கள் உணர்த்துகின்றன.

### தமிழர் நிலை

எட்டுக் கோடி தமிழர்கள் உலகில் உள்ளனர். இவர்கள் ஒருவகையில் ஏதிலிகளாகவும், இன்னொரு வகையில் அடிமைகளாகவும் இருக்கின்றனர்.

இந்தியாவில் கூட தமிழர்கள் அடக்கப்படும் இனமாகவே உள்ளனர்.

தமிழீழம் ஒன்றைத் தவிர வேறு எதுவும் உலகத் தமிழர்களுக்கு விடுதலையைப் பெற்றுத்தராது.

எமது வரலாற்றை நாம் பின்னோக்கிப் பார்க்கவேண்டும்.

இலங்கைத் தீவு உண்மையில் யாருடைய நாடு?

இந்தியாவில் இருந்து விஜயன் வருவதற்கு முன்

இலங்கைத் தீவில் இயக்கர், நாகர் என்ற இரு பூர்வீக இனங்கள் இருந்தன. இவர்கள் தமிழர்களே. அப்போது இலங்கைத் தீவு முழுவதும் தமிழர்களுக்குச் சொந்தமாகவே இருந்தது.

இயக்கர்கள் விஜயனின் வருகையின் பின் சிங்களவர்களாக மாறிய பின்னரே இங்கு சிங்கள இனம் வந்தது.

இந்தியா முழுவதிலும் கூட அப்போது திராவிட பாரம்பரியமே பரவி இருந்தது.

இன்று ஆந்திரா, கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் இருக்கும் 16 கோடி மக்களும் திராவிட மொழி மருவியதால் — சமஸ்கிருதம் வந்து கலந்து திரிந்ததால் — உருவான மொழிகளைப் பேசுகின்றனர்.

### நேரு கூறியவை

இப்போது பாகிஸ்தான் பகுதியாக இருக்கும் சிந்து வெளிநாகரீகப் பகுதியில் — திராவிட பாரம்பரியமே ஆதி காலத்தில் சிறப்புற்றிருந்தது என்பதைக் காட்டும் அகழ்வாராய்ச்சி சான்றுகள் 1927 இல் கிடைத்தன.

ஆனால் வடக்கிலிருந்து வந்த ஆரியர்களினால் தமிழர்கள் இந்தியாவிலும் சிறுபான்மையினராக்கப்பட்டனர்.

இந்திய முன்னாள் பிரதமர் நேரு கூட திராவிடர்களே இந்தியாவின் பூர்வீகக் குடிகள்; ஆரியர்கள் வெளியிலிருந்து வந்தவர்கள் என ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இந்த ஆரியர்கள் தான் எமது வழிபாட்டு முறையில் சமஸ்கிருதத்தைப் புகுத்தினார்கள்; எமது சமுதாயத்தினுள் சாதி அமைப்பு முறையைத் தோற்றுவித்தார்கள்.

இந்தியாவிலும் இலங்கையிலும் இருந்த தமிழ் மன்னர்கள் வீரர்களாக இருந்தார்கள். அவர்களது மரபுவழி உயர்ந்ததாக இருந்தது.

கடல் கோள் கொள்வதற்கு முன்னர் குமரிக் கண்டம் முழுவதும் திராவிட மரபே — தமிழர் பண்பாடே — மிளிர்ந்திருந்தது.

உலகில் சிறந்த ஆறு மொழிகளில் ஒன்றாகவும் தமிழ் விளங்கியது.

### நிலைமை மாறியது

ஆனால் கால ஓட்டத்தில் இந்நிலைமை மாறியது.

இலங்கையில் சிங்களவர்கள் பின்னர் படிப்படியாக பெருகி வந்தனர்; அவர்களது பிறப்பு வீதம் அதிகரித்தது.

தமிழர்களின் வாழ்வுமுறை பழக்க வழக்கங்களால் அவர்களது பிறப்பு வீதம் குறைந்து வந்தது.

சிங்களப் பகுதிகளுக்குச் சென்ற தமிழர்களும் சிங்களவர்களாக மாறத் தொடங்கினர்.

### துரோகிகள்

தமிழர்களிடையே எப்போதும் துரோகிகள் இருந்து வந்துள்ளனர்.

சங்கிலியனும், பண்டாரவன்னியனும் தமிழர்களினாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டனர்.

1948 இல் ஸி. சுந்தரலிங்கம், டி. எஸ். சேனநாயக்காவின் மந்திரிசபையில் சேர்ந்து கொண்டதால் தமிழர்களின் உரிமை பற்றி பேசமுடியாத நிலை ஏற்பட்டது.

1949 இல் மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்ட போது அதற்கு ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஒத்துழைத்தார்.

இலங்கை — இந்திய ஒப்பந்தத்துக்கு முன்னின்று ஒத்துழைப்புக் கொடுத்ததன் மூலம் அமிர்தலிங்கம் தமிழினத்தைக் காட்டிக் கொடுத்தார்.

இந்தியாவினதும் ஈழத்தமிழர்களினதும் நலன்மாறுபடும் போது இந்தியாவின் நலனைப் பேணவே இலங்கை — இந்திய ஒப்பந்தம் செய்யப்

இந்தியத் தூதராக இருந்த டிக்ஸித்.

அத்தகைய நாட்டின் தலைவர் ராஜீவ் காந்தி, ஈழத் தமிழர்கள் மீது இராணுவத்தை ஏவி, ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்து, அவர்களின் சொத்துக்களை நாசமாக்கி, ஈழத் தமிழ்ப் பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி, பல்வேறு கொடுமைகள் புரிவதற்கு வழி சமைத்தது இந்த ஒப்பந்தம்.

இந்த ஒப்பந்தத்துக்கு முன்னின்று ஒத்துழைப்புக் கொடுத்ததால்தான் அமிர்தலிங்கம் இறந்தபோது ''இந்தியா தனது நல்ல நண்பனை இழந்து விட்டது'' என்றார் ராஜீவ் காந்தி.

இவ்வாறு தமிழர்களை தமிழர்களே காட்டிக் கொடுத்து வந்துள்ளார்கள்.

இன்றுகூட கொழும்பில் இருந்து கொண்டு சில தலைவர்கள் அரசின் தமிழின அழிப்புக்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

### திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்

1881 இல் உத்தியோகபூர்வமாக இலங்கையில் சனத்தொகை கணக்கெடுக்கப்பட்டபோது தென் தமிழீழத்தில் 5 ஆயிரத்து 947 சிங்களவரும், 75 ஆயிரம் தமிழரும், 43 ஆயிரம் முஸ்லிம்களும் இருந்தனர்.

அதாவது அப்போது அங்கு 317 தமிழர்களுக்கு 25 சிங்களவர் என்ற விகிதாசாரத்தில் குடிசனத்தொகை இருந்தது.

ஆனால் சரியாக நூறாண்டுகள் கழித்து — அதாவது 1981ஆம் ஆண்டு — கணக்கெடுப்பின்படி 4 லட்சத்து 11 ஆயிரம் தமிழருக்கு 2 லட்சத்து 56 ஆயிரம் சிங்களவர்களும் 3 லட்சத்து 19 ஆயிரம் முஸ்லிம்களும் இருந்தனர்.

அதாவது 42 தமிழருக்கு 25 சிங்களவர் என்ற நிலைக்கு இது மாறியது.

திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களின் விளைவே இது.

### முயற்சிகள் தோற்றன

ஐக்கிய இலங்கைக்குள் தமது உரிமைகளைப் பெறுவதற்கு சமாதான வழிகளில் தமிழர்கள் எடுத்த பல்வேறு முயற்சிகள் தோற்றுப்போய் விட்டன. சிங்களத் தலைவர்கள் காலம் காலமாக தமிழரை ஏமாற்றியே வந்துள்ளனர்.

ஒப்பந்தமோ, பேச்சுவார்த்தையோ எமது பிரச்சினைகளைத் தீர்த்துவிடப்போவதில்லை. எமது மண்ணை மீட்பதே எமக்குரிய ஒரே வழியாகும்.

இந்த மண்ணை நேசிக்கும் மக்களின் உதவியுடன் விடுதலைப் புலிகள் அமைப்பு இந்த மண்ணை விடுவித்தே தீரும்.

இந்த மண்ணின் விடுதலைக்கு இப்போது அவசரமாகத் தேவைப்படுவது இரண்டு.

ஒன்று நிதி. மற்றையது ஆட்பலம் — போராளிகளின் எண்ணிக்கை.

நிதியைப் பொறுத்தவரை இன்று பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாக்களை ஸ்ரீலங்கா அரசு செலவிட்டு வருகின்றது. கடந்த ஆண்டு மட்டும் ஏறக்குறைய 2 ஆயிரத்து 600 கோடி ரூபாவை யுத்தத்துக்கு அரசு செலவிட்டிருக்கிறது.

''முன்னேறிப்பாய்தல்'' நடவடிக்கையின் பின்னரும் ஆயிரம் கோடி ரூபாவுக்கு ஆயுதங்களைப் புதிதாக வாங்கும் முயற்சியில் ஸ்ரீலங்கா அரசு இறங்கியுள்ளது.

ஆனால் இன்று நாம் யுத்தத்துக்காக உங்களிடம் எதிர்பார்ப்பது— ஸ்ரீலங்கா அரசுப் படைகளை விரட்டியடிப்பதற்கு நாம் உங்களிடம் கோருவது— வெறும் நூறு கோடி ரூபா மட்டும்.

இதை நாம் உங்களிடம் வற்புறுத்திக் கேட்கப்போவதில்லை; வலியுறுத்தித் திரட்டப் போவதுமில்லை.

உங்கள் வரலாற்றுக் கடமையை நீங்களே உணர்ந்து நிதியை வாரி வழங்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

நீங்கள் வழங்கும் நூறு, இருநூறு ரூபாக்களோ ஆயிரம், ஐயாயிரம் ரூபாக்களோ எமது தேவையை நிறைவு செய்யப் போதுமானவை அல்ல என்பதை உணர்ந்து, நீங்கள் வாரி வழங்கவிருக்கும் தொகையை முடிவு செய்யுங்கள்.

நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கும் தலைவர் பிரபாகரனின் காலத்திலேயே உங்கள் இனத்தின் விடுதலையை நீங்கள் வென்றெடுக்க வேண்டும்.

அதற்கான உங்கள் பங்களிப்பை நீங்களே தீர்மானியுங்கள். உங்கள் முடிவுக்கு அதனை விட்டுவிடுகின்றோம்.

ஸ்ரீலங்கா அரசின் கெடுபிடிப் போரினால் உங்களுக்கு ஏற்படும் இழப்புகளைத் தவிர்ப்பதற்காக நீங்கள் செய்யப் போகின்ற இந்த உதவி—

அந்த இழப்பைத் தவிர்க்காவிட்டால் உங்களுக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்திலும் பார்க்க மிகக் குறைவானதேயாகும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் — என்றார். ★

---

## உண்மை—

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] நாடாளுமன்றத்தில் பேசும் போது அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் புதிதாகக் கைப்பற்றிய பகுதிகளில் இருந்து படையினர் விலகி விட்டதாக பி. பி. ஸி. வியாழனன்று அறிவித்திருக்கிறது. சரியான நிலைமையை அறிய மக்கள் விரும்புகிறார்கள். எனவே அரசு இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் — என்று கேட்டுக் கொண்டார்.

இதனை அரசின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரன கூறினார். [அ]

---

## தீர்வுத்திட்டம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] வடக்கில் இராணுவ நடவடிக்கையினால் ஏற்பட்ட விளைவுகளை அரசு நன்கு உணர்ந்துள்ளது—

இங்குள்ள மக்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும் என்ற நோக்கில் நீங்கள் முன் வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகளை, இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவதன் மூலமாக நிறைவேற்றக்கூடியதாக இருக்கும்.— என்றும் அமைச்சர் கூறினார்.

[ஐ-எ]

---

## வாழைச்சேனை—

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] யில் இராணுவத்தினர் இடைமறித்து அவரைப் பொறுப்பேற்றனர் என்றும்—

பின்னர் அவரது சடலம் பேய்த்தாளை மயானத்தில் காணப்பட்டதாகவும் தமிழ் எம். பி ஒருவரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எவ்வித காரணமும் இன்றி கண்டபடி பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகமும், ஷெல் தாக்குதலும் மேற்கொண்ட போதே பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சுன்னாகத்திற்கு மின் வழங்கல்

நுரைச்சோலை மின் வழங்கல் சேவையூடாக சுன்னாகத்திலுள்ள மக்கள் வதிவிடங்கள், வியாபார நிலையங்கள், வேலைத் தலங்கள் ஆகியவற்றுக்கு மின் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விரைவில் வழங்கப்படவிருக்கும் இத் திட்டத்தினூடாக தினமும் காலை 1 மணித்தியாலமும், இரவு 4 மணித்தியாலமும் மின்சாரம் வழங்கப்படவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ நடவடிக்கையால் வீடு இழந்தோருக்கு வீடு கட்டித்தர அரசு நடவடிக்கைஎடுக்கவேண்டும்

## யாழ். செஞ். சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 24
''முன்னேறிப் பாய்தல்''

இராணுவ நடவடிக்கையினால் வீடு இழந்தவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலைமை அலுவலகம் கொழும்பிலுள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமை அலுவலகம் ஆகியவற்றுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள மேலும் சில முக்கிய வேண்டுகோள்கள் வருமாறு;

ஷெல் மற்றும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மக்கள் குடியிருப்புப் பகுதிகள், வழிபாட்டுத் தலங்களில் நடத்துவதை தவிர்க்க வேண்டும்.

இடம் பெயர்ந்தவர்களுக்கு உடுபுடைவைகள், படுக்கை விரிப்பு, பாய், சமையல் பாத்திரங்கள் போன்றவை வழங்கப்படவேண்டும்.

செஞ்சிலுவைக்கொடி பறக்கும் இடங்களையாவது இனங்கண்டு முக்கியமாக அவ்விடங்களில் தாக்குதலை தவிர்க்கவேண்டும். குறிப்பாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலிவடக்கு காரியாலயம் மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டு தளபாடங்கள், மருந்து வகைகள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. [க-4]

## வறுமை நிவாரண முத்திரைகள்

வலிகாமம் தெற்கு, ஜூலை 24

ஏழாலை தென்மேற்கு கிராமசேவையாளர் பிரிவில் இதுவரை வறுமை நிவாரண முத்திரைகள், இடம்பெயர்ந்தோர் முத்திரைகளைப் பெற்றுக் கொள்ளாதவர்களை மேற்படி கிராம சேவையாளர் அலுவலகத்தில் வந்துபெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-152)

### நவாலியில் நடைபெற்ற

## புக்காரா தாக்குதலில் 27 மாணவர்களும் பலி

நவாலி சென் பீற்றேஸ் தேவாலயத்தின் மீது கடந்த 9 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட புக்காரா தாக்குதலின் போது குளிர் பானம் வழங்கிக் கொண்டிருந்த சுமார் 27 மாணவர் மாணவியரும் இறந்துள்ளனர் என அறியவருகின்றது

இம்மாணவர்கள் தேவாலயத்தின் உள்ளும் சென் பீற்றேஸ் பாடசாலையிலும் அப்பகுதி வீதிகளிலும் தங்கியுருந்த மக்களுக்கு காலை முதல் சம்பவம் நடைபெறும் வரை உணவுப் பார்சல்களையும் குளிர் பானங்களையும் தேநீரையும் வழங்கிக் கொண்டிருந்த போது புக்காராத் தாக்குதலுக்கு இலக்காகி உடல் சிதறிப் பலியானார்கள்,

இவர்களில் பல மாணவர்கள் இவ்வருடம் நடைபெறவிருக்கும் க. பொ. த உயர்தர பரீட்சையில் தோற்றவிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மாணவர்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரி' மானிப்பாய் மகளிர் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாவர். [க-100]


தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். கோட்டம்

விசேட பொதுச் சபைக் கூட்டம்

காலம்:- 26 - 07 - 1995 புதன்கிழமை மாலை 4 00 மணி

இடம்:- புதிய விஞ்ஞானக் கல்விக்கழகம் எழிலகம் முன்பாக யாழ்ப்பாணம்

கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கவும் சமுகமளிக்காததால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். கோட்டம்

(சி-1940)



41 ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பும்
(24 - 07 - 1995)



சண்முகநாதன் செல்வராசா
(போர்மன், வடபிராந்திய போக்குவரத்து சபை, கோண்டாவில் சாலை]

தோற்றம்: 15 - 03 - 1942
மறைவு: 14 - 06 - 1995

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
சக ஊழியர்

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றும்படி அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

தியேட்டர் ஒழுங்கை,
இணுவில்

(37694)


## நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ். மாநகரசபைப் பகுதியில்' விசர்நாய் ஒழிப்புத்திட்டத்தை சுகாதாரப் பகுதியினர் மீண்டும் அமுல் செய்யவுள்ளனர்.

அதன்படி - வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடும் திட்டம் இன்று திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாக உள்ளது.

கச்சேரியடியில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இன்று முதல் ஐந்து நாட்களுக்கு நாய்களுக்குத் தடுப்பூசி போடப்படும் என்றும் —

சகலரும் வளர்ப்பு நாய்களுக்கு மாநகரசபையின் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும் என்றும் —

அனுமதிப்பத்திரங்களைப் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கல்வித்துறை சார்ந்தோர் பங்குபற்றும் கூட்டங்கள்

கல்வித்துறையுடன்தொடர்புடையவர்களுக்கு நிதியம் சம்பந்தமான கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் கோட்டரீதியாக வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இச்சந்திப்பின் போது விடுதலைப்புலிகளின் நிதிப் பொறுப்பாளர் கருத்துக்களை வழங்குவார்.

★ பளைக் கல்விக்கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள். ஊழியர்களுக்கு: இன்று திங்கட்கிழமை மு ப 11மணிக்கு—பளை மத்திய கல்லூரி மண்டபத்தில்

★ கரவெட்டி, பருத்தித்துறை, கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், ஊழியர்களுக்கு; இன்று திங்கட்கிழமை பி. ப 1மணிக்கு— நெல்லியடி ம. ம. வி. மண்டபம்.

★ யாழ்ப்பாணம் வலிகாமம் கோட்ட அதிபர்கள் ஆசிரியர்கள் அலுவலர்கள் ஊழியர்களுக்கு, நாளை செவ்வாய் பி. ப 1 மணிக்கு— யாழ். மத்திய கல்லூரியில்.

★ நல்லூர், வேலணைக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் வலயம் 1 இன் அலுவலர்கள், ஊழியர்களுக்கு: நாளை செவ்வாய் பி. ப. 2 - 30 மணிக்கு—யாழ் இந்துக்கல்லூரியில்.

★ கோப்பாய் கல்விக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், வலயம் 2இன் அலுவலர்கள், ஊழியர்களுக்கு: புதன்கிழமை பி. ப. 1 மணிக்கு— நீர்வேலி அத்தியார்இந்துக்கல்லூரியில்.

★ சாவகச்சேரி, கல்விக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், ஊழியர்களுக்கு: புதன்கிழமை பி. ப 3 மணிக்கு— றிபேக் கல்லூரியில். (ஓ)

## இராணுவ நடவடிக்கையால் மானிப்பாயிலும் சேதம்

அண்மையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இராணுவத்தினரால் சேதப்படுத்தப்பட்டுள்ளது. அலுவலக முன் பக்கக் கதவுகளும், கண்ணாடி ஜன்னல்களும் இராணுவத்தினரால் உடைக்கப்பட்டதாக அறியப் படுகின்றது.

இதேவேளை, சங்கானை பிரதான வீதியிலுள்ள கட்டடம் ஒன்றில் இடம் பெயர்ந்து செயற்பட்டு வரும் இளவாலை உப தபால் நிலையமும், இராணுவத்தினரால் கதவு உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது. அங்குள்ளபதிவேடுகளும், பொருள்களும் துருவி ஆராயப்பட்டு வீசப்பட்ட நிலையில் காணப்பட்டன.

சங்கானை கூடத்து மனோன்மணி ஆலயமும் இராணுவத்தினரின் ஷெல் தாக்குதத்தால் சேதமடைந்தது. சங்கானை தேவாலய வீதியில் பல வீடுகள் இராணுவத்தினரால் கதவுகள் உடைக்கப் பட்டு சேதமுற்றன. (க-135)

## ஈழத்தமிழர்கள் கொல்லப்படுவதை கண்டித்து கோபாலசாமி அறிக்கை

சென்னை, ஜூலை 24

தமிழர்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கைகளை இலங்கை அரசு. அமெரிக்கா உட்பட உலகின் பல நாடுகளில் இருந்தும் ஆயுதங்களை வாங்கிக் குவித்து வருகிறது என்று மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச் செயலர் திரு. வை. கோபாலசாமி குற்றஞ் சாட்டியுள்ளார்.

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

தமிழர்களை அழிக்கத் திட்டமிட்டு அவர்கள் மீது இலங்கை அரசு மூர்க்கத்தன மான தாக்குதல்களை நடத்துகிறது.

[illegible] இந்த இனப்படுகொலை நடவடிக்கையை நாம் வன்மை யாக எதிர்க்கிறோம்.

சிங்கள அரசு, ஈழத் தமிழினத்தை அடியோடு கருவறுக்கும் தனது திட்டத்தை செயல்படுத்த தனது முப்படைகளையும் ஏவி விட்டுள்ளது.

பேச்சுவார்த்தை என்று ஒரு பக்கத்தில் நாடகமாடிக் கொண்டே — மறுபக்கத்தில் அமெரிக்கா உட்பட உலகின் பல நாடுகளிடம் இருந்தும், சிங்கள அரசு ஆயுதங்களை வாங்கிக் குவித்தது.

எனவே ஈழத்தமிழர்களைப் பாதுகாக்கவும், அவர்களது உரிமைகளுக்காகவும் நாம் ஆதரவுக்குரல் எழுப்புவோம்.

அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிக்கும் கொடுமையை நிறுத்த வேண்டும் என்று, சிங்கள அரசுக்கு எதிராக உரத்த குரலில் கண்டனம் எழுப்புவோம்.

ஈழத்தமிழர் சிந்தும் கண்ணீரில் நாமும் பங்கேற்கின்றோம்.

இவ்வாறு கோபாலசாமி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை —

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இராணுவ பலத்தைக் கொண்டு தமிழினத்தை அழிக்க முனைந்துள்ள செயலை இலங்கை அரசு கைவிட வேண்டும்.

தமிழீழத்தில் அமைதி நிலை தோற்றுவிக்கப்படவும் — அங்கு வாழும் மக்களின் உரிமைகள் காப்பாற்றப்படவும் —ஏற்ற வழிவகைகளைக் காண அரசு முன்வர வேண்டும்.

தமிழர்களைப் படுகொலைக்கு ஆளாக்கும் செயலை தொடர்ந்தும் இலங்கை அரசு மேற்கொண்டு வருவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில உள்ள ''வோக்ஸ் வகன்'' [6 ஸ்ரீ தொடர்] காரும் ஒலிவெட்டி (Portable) ஆங்கில தட்டச்சு இயந்திரமும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 61, புகையிரத வீதி, கொக்குவில். (சரஸ்வதி மில் முன்பாக) (37685)

### காவேரி சீயாக்காய்

காவேரி சீயாக்காய் பவுடர் மூளை குளிர்மைக்கு உகந்த கருசலாங்கண்ணி என்னும் மூலிகை சேர்த்து தயாரிக்கப் படுவது. சீயாக்காய்ப்பவுடர் என்று கேட்காமல் காவேரி சீயாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்கிப் பாவியுங்கள். (37686)

### SPECIAL ANTENNA

To view Rupavahini, Madras Programmes Fixing Special, T.V. Antenna, Repairing Antennas, Radios-T.V. Decks, Clocks and Watches. Venus Dilka Watch and Radio Works, 284, Stanley Road (Ariyakulam Junction), Jaffna. Branch: KandyRoad, Chavakachcheri. (C-1686)

### புலமைப் பரிசில் பரீட்சை

புதிய பாடத்திட்டத்திற்குரிய வழிகாட்டி ''பொது விவேகம்'' 97/- வினாத்தாள் I, IIற்குரியது. வெளியீடு: அன்ரன் பதிப்பகம். எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். 18% கழிவுடன் மொத்தமாகப் பெற யாழ்ப்பாணப் புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (சி-1717)

### தேவை

வெற்று ஜாம் (Jam) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ், (தனி) லிமிட்டெட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-1903)

### மணப்பெண் தேவை

வடமராட்சியைச் சேர்ந்த பிரான்ஸில்வதியும் 33 வயது, மகம் 1, செவ்வாயற்ற, இரசபாவம் 4 உடைய மணமகனுக்கு சிவந்த, அழகிய, குடும்பப் பாங்கான மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைத்துச் செல்லலாம். இல. 816, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [37690]

### வாடகைக்குத் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள திருமண சேவை ஸ்தாபனத்திற்கு வீட்டில் ஒரு அறையோ அல்லது தனியான சிறிய கட்டடமோ உடன் வாடகைக்குத் தேவை. தளபாட வசதியிருந்தால் நல்லது, 814, மே/பா உதயன். [37661]

### உடன் தேவை

இடம் பெயர்ந்த பிள்ளையற்ற தம்பதிக்கு தனியாகவோ அல்லது பகுதியாகவோ இருப்பிட வசதி வாடகைக்கு உடன் தேவை. நல்லூர் மானிப்பாய் பிரதேச சபை விரும்பத்தக்கது. 815 மே/பா, உதயன். (37662)

### தவறிவிட்டது

21-7-95 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணியளவில் சீனிவாசகம் வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடையில் பெண்கள் அணியும் கைக்கடிகாரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள சங்கீதா றேட் சென்ரறில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். சா.ஸ்ரீகாந்தன். [37691]

## உலக உலா வெளி வந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 24

பல புதிய தகவல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் உள்ளடக்கிய ''உலக உலா'' சஞ்சிகையின் இம்மாத இதழ் வெளிவந்துள்ளது. [ஐ]

# 3 ஆம் கட்ட ஈழப் போரில் இதுவரை
# 11 போர்க் கலங்களை அரசு இழந்தது

கடந்த 19ஆம் திகதி வரை 3 ஆம் கட்ட ஈழப் போரில், அரசின் பதினொரு போர்க்கலங்கள் விடுதலைப் புலிகளால் தகர்த்து அழிக்கப்பட்டுள்ளன.

விமானப் படைக்குச் சொந்தமான ''அவ்ரோ'' விமானங்கள் இரண்டு, ''புக்காரா'' தரைத்தாக்கு விமானம் ஒன்று, கடற்படையின் பீரங்கிக் கப்பல்கள் இரண்டு, கட்டளைக்கப்பல் ஒன்று, இராணுவத்தின் டாங்கி ஒன்று, 'சலாடின்' கவச வாகனங்கள் இரண்டு, 'பவல்' கவச வாகனம் ஒன்று என்பவையே இவ்வாறு அழிக்கப்பட்ட போர்க் கலங்களாகும்.

இது தவிர மிகப் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றும், மற்றும் இரு இராணுவ நடவடிக்கைகளும் கடந்த 3 மாதங்களில் விடுதலைப்புலிகளால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளன.

பாரிய மண்டைதீவு படைத்தளம், தரவைக்குளம், கட்டுமுறிவுக்குளம் இராணுவ முகாம்கள் என்பனவும் தகர்த்து அழிக்கப்பட்டன.

இராணுவத்தின் அதி உயர் இராணுவ அதிகாரிகளாக 2 ஆம் லெப்டினன்ட், கேணல்களும், விமானப்படையின் விங்கொமாண்டர்கள் 5பேரும் மற்றும் பெரும் எண்ணிக்கையான துருப்புக்களும் இக்காலத்தில் கொல்லப்பட்டனர்.

விடுதலைப்புலிகளின் காலத்தில் மிகக்குறுகிய காலத்தில் முப்படைகளுக்கும் ஏற்படுத்தப்பட்ட மிகப்பெரிய இழப்பு இதுவாகும் எனத்தெரியவருகிறது. (எ)

ஹங்கேரியில்

## தப்பிய இலங்கையருக்கு அரசியல் அகதி அந்தஸ்து?

புடெபெஸ்ட் ஜூலை 24

மூடப்பட்ட ட்ரக் ஒன்றில் சட்டவிரோதமான முறையில் ஜேர்மனிக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது ஹங்கேரியில் மூச்சுத்திணறி மரணமடைந்த இலங்கையர்கள் தவிர மீதியான 19 பேரும் ஹங்கேரியில் அரசியல் அகதி அந்தஸ்துக் கோரி விண்ணப்பிக்க முடியும்.

ஆனால் மேற்படி இலங்கையர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்குவதோ மறுப்பதோ ஹங்கேரி அதிகாரிகளைப் பொறுத்த விடயம் என்று புடாபெஸ்டிலுள்ள அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் ஹங்கேரி வானொலி மூலம் தெரிவித்தார். [உ]

## இடம்பெயர்ந்த மக்கள் வீடுகளில் திருடர் கைவரிசை

உடுவில், சங்குவேலி, கந்தரோடை, கட்டுடை, மானிப்பாய் பகுதிகளில் 'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையினால் மக்கள் இடம் பெயர்ந்த வீடுகளில் இருந்து இராணுவம் துரத்தப்பட்ட பின்னரும் பல பொருள்கள் திருடர் கோஷ்டிகளால் களவாடப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

விவசாயிகள் வீடுகளில் வைக்கப்பட்டிருந்த பலநெல் மூடைகள் திருடப்பட்டுள்ளன.

உடுவில் — சண்டிலிப்பாய் வீதியில் சங்குவேலி பகுதியில் ஒருவீட்டில் இருந்து பத்துக்கும் மேற்பட்ட நெல்மூடைகள் திருடப்பட்டுள்ளன.

நெல்மூடைகளுடன் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் பல விவசாய உபகரணங்களையும் திருடர்கள் களவாடிச் சென்றதனால் விவசாயிகள் பலத்த நஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

ஆடுகள், கோழிகள் என்பனவும் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி திருடப்பட்டுள்ளன.

மானிப்பாய், நவாலி, சித்தன்கேணி போன்றபகுதிகளில் எறிகணைதாக்குதலால் சேதமடைந்த வீடுகளில் இருந்தும் திருட்டுக்கள் நடைபெற்றுள்ளன.

இப்பகுதிகளிற்பூட்டப்பட்ட நிலையில் உள்ள வீடுகள் பலவும் கதவுகள் உடைக்கப்பட்டு பெறுமதி மிக்கபல பொருள்கள் திருடப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. (க-152)

## 75 குடிசைகள் தீக்கிரை

சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, தொல்புரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் 75 குடிசைகள் முற்றாகவும், 70 குடிசைகள் பகுதியாகவும் அண்மைக்கால இராணுவ நடவடிக்கையின் போது எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன.

காரைநகர், தெல்லிப்பளை, மாதகல், இளவாலை, காங்கேசன்துறை ஆகிய இடங்களில் இடம் பெற்ற முன்னைய இராணுவ நடவடிக்கைகளால் அங்கு வசிக்க முடியாது தமது உடைமைகளை இழந்து வெளியேறியோரே இந்த முகாம்களில் தங்கியிருந்தனர். (க-எ-175)

## 41ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

கனடாவில் காலமான முன்னாள் வடமாநில கல்விப்பணிப்பாளர்



ரி. மாணிக்கவாசகர்
(B. A. P. G. T)
தோற்றம்: 02.01-1920
மறைவு: 13-06-1995

## 12ஆம் ஆண்டு நினைவலைகள்

ஜூலை 83இல் திருநெல்வேலியில் ஸ்ரீலங்கா இராணுவ வெறியாட்டத்தில் பலியான



எஸ். சரவணமுத்து
(B. A. Lond)
தோற்றம்: 19-04-1907
அழிப்பு: 24.07.1983



எஸ். கலாபரமேஸ்வரன்
(M. A. Cey)
தோற்றம்: 02-08-1944
அழிப்பு: 24-07-1983

தங்கள் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்;

பெறாமக்கள், சகோதரர்கள், குடும்பத்தினர்.

சுன்னாகம் வீதி,
புத்தூர்.

(37694)

## ANNUAL EXTERNAL EXAMINATION 1994

Examination Entry forms will be received form suitable registered candidates, who wish to sit for the following Examinations scheduled to commence in October - December 1995

- First in Arts
- First in Commerce
- Bachelor of Arts (General) Part - I
- Bachelor of Arts (Special Part - I
- Bachelor of Commerce Part - I
- Bachelor of Arts (General) Part - II
- Bachelor of Arts (Special) Part - II
- Bachelor of Commerce Part - II
- Bachelor of Arts (Special) Part - III
- Bachelor of Commerce Part - III

Examination Entry forms could be obtained from the External Registration & Examinations Unit, University of Jaffna in person or by post from July 25, 1995.

Those who wish to obtain the forms in person are required to produce a receipt from the Manager of the Peoples' Bank located in the University of Jaffna for the payment of Rs. 15/-. Those who wish to obtain the forms by post are required to send a Money order / Postal order for Rs. 15/- drawn in favour of the Bnrsar, University of Jaffna together with a self addressed envelop affixing stamp to the value of Rs. 12-50.

Completed Examination Entry forms should be submitted to the External Registration & Examinations Unit on or before August 15, 1995.

Those who failed the First in Arts / First in Commerce Examination in given 3 attempts may be allowed to sit the Examination with the approval of the Senate.

Further information could be obtained from the above unit.

**Registrar.**

External Registration & Examinations Unit,
July 21, 1995

[C-1928]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## கறுப்பு ஜூலை

கறுப்பு ஜூலை. இது இலங்கையில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியிலும் பிரசித்தமானது. சிங்களவர்களினதும், அப்போதைய சிங்கள அரசினதும் காட்டுமிராண்டித்தனமான தமிழர் இனப்படுகொலைக்காக அபகீர்த்தி பெற்றமையே அந்தப் பிரசித்தமாகும்.

1983 ஜூலை 23 ஆம் திகதி ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த லெப்ரினன்ட் வாஸ் குணவர்த்தனாவும் மற்றும் 12 சிப்பாய்களும், திருநெல்வேலியில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் கொலையுண்டனர்.

அதற்குப் பழிவாங்கும் விதத்தில் அடுத்த நாள் 24 ஆம் திகதி இராணுவத்தினர் எழுபதுக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை கண்மூடித்தனமாகச் சுட்டுக் கொன்றனர். குடாநாட்டில் ஓடிய அந்தளவு தமிழர்களின் இரத்தமும் சிங்கள இனவெறியர்களுக்கும், இராணுவத்துக்கும் போதுமானதாக இல்லை.

தென்னிலங்கையில் வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களை 25ஆம் திகதி தொடக்கம் ஒருவார காலத்துக்கு இனப்படுகொலை செய்தனர். சிறைச்சாலையில் கைதிகளாக இருந்த தமிழ்க் கைதிகள் கூட (53 பேரும்) கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

பன்னிரண்டு வருடங்களுக்கு முன் வந்த கறுப்பு ஜூலை, தமிழீழத்துக்கான போராட்டத்தில் பெரும் திருப்பு முனையாகவும் அமைந்தது. தமிழர்கள் தமது சொந்தத் தாயகத்தில் தமக்கென ஓர் ஆட்சியையும் அரசையும் அமைத்து வாழும் வரை பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் வாழ முடியாது. இந்த உண்மையைப் புரிந்து கொள்ளத் தவறிய பெரும்பாலான தமிழர்களை அதனை உணரத் தூண்டியது கறுப்பு ஜூலை என்றால் மிகையல்ல...

கறுப்பு ஜூலை தொடக்கம் இப்போது நிகழும் ஜூலை வரையான பன்னிரண்டு வருட காலத்தில் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் — அதன் பிரதான வழிமுறையான ஆயுதப் போராட்டம் — பல புதிய பரிமாணங்களைக் கண்டு பல படிகள் உயர்ந்து முன்னேறி நிற்கிறது.

இராணுவம் பெரும் எடுப்பில் தொடங்கிய ''முன்னேறிப் பாய்தல்'' தாக்குதல் நடவடிக்கை படுதோல்வியில் முடிந்தமை தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் முற்றிலும் புதிய பரிமாணத்தை — இதுவரை கண்டிராத சாதனையை — தோற்றுவித்துள்ளது.

சிங்களவர்களும், அவர்களின் அரசும் தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப, தமிழர்களின் விடுதலையுடன் விளையாட முடியாது என்பதனை இந்தப் பெருந்தோல்வி அவர்களுக்கு உணர்த்தி உள்ளது.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையையும், விடுதலையையும் நிராகரித்து, வெறும் அதிகாரப் பரவலுடன் சமாளித்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று இனியும் சிங்கள அரசியல் தலைவர்கள் கற்பனை செய்யக் கூடாது என்பதனை பன்னிரண்டு வருடகால இடைவெளியின் பின் இந்த வருடத்து ஜூலை உறுதியுடன் எச்சரித்துள்ளது!

# பல படை முகாம்களுக்கு ஏறாவூரில் மூடு விழா

கொழும்பு, ஜூலை 24

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரில் கரடியனாறு, மரப்பாலம், இலுப்படிச்சேனை ஆகிய இடங்களிலும் மட்டக்களப்பு நகர எல்லையில் சத்துருக்கொண்டான் பிரதேசத்திலும் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்கள் அனைத்தும் கடந்த வாரம் மூடப்பட்டன.

தற்போது மட்டக்களப்பு மேற்கில் வவுணதீவு இராணுவ முகாம் மட்டுமே எஞ்சி உள்ளது.

கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு, அம்பிலாந்துறை போரதீவு ஆகிய இடங்களில் விசேட அதிரடிப் படையினரின் முகாம்கள் அமைந்துள்ளன.

இதே வேளை —

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் உள்ள பல முகாம்கள் மிக விரைவில் மூடப்படும் எனத் தெரிய வருகிறது. [எ]

## பிரதேச செயலக இடமாற்றம்

யாழ்ப்பாணம் ஜூலை 24

தெல்லிப்பளை பிரதேச செயலகம் இன்று 24ஆம் திகதி முதல் தற்போது பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாய உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தில் இயங்கும் எனப் பிரதேச செயலர் திரு. நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார். [எ]

## மாதாந்த உதவிப்பணம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

புங்குடுதீவு, வேலணை, நயினாதீவு, நெடுந்தீவு பகுதி மக்களின் வைகாசி மாத பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவை யாழ். மத்திய தபாலகத்தில் இயங்கும் வேலணை, புங்குடுதீவு தபாலகங்களிலும் —

கெற்பலி முகாமில் வசிப்போரின் இக் கொடுப்பனவைப் பெறுவோர் விடத்தற்பளை உபதபாலகத்திலும் —

புற்று நோயாளர் தொழு நோயாளர் தமது வைகாசி மாதக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளும்படியும் வேலணை பிரதேச செயலர் அறிவிக்கிறார். [எ]

## உலகத் தமிழினத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிச்சயமாக உலக வரலாற்றில் பிரபாகரனின் காலம் பதிவு செய்யப்படும்.

உலக வரலாற்றை கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப் பின் என்று வகுப்பதைப் போன்று உலகத் தமிழினத்தின் வரலாறு பிரபாகரனுக்கு முன், பிரபாகரனுக்குப் பின் என்று நிச்சயம் எழுதப்படும்.

தமிழினத்தின் விடுதலைப் போர் முழு உலகையுமே இன்று வியப்பில் ஆழ்த்தியுள்ளது. அதில் பெண்கள் படையின் வீரம் செறிந்த பங்களிப்பு புதிய பரிணாமத்தைக் கொடுத்துள்ளது.

தனது உடலை சிதறடித்து எதிரியை அழிக்கும் பெண் தற்கொலைப் படையணி கூட தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்டிருக்கிறது.

பிரபாகரனின் மூளையிலும், இதயத்திலும் என்ன இருக்கிறது என்பதைக் கவனத்தில் கொண்டு உங்கள் போர் உத்திகளை வரையுங்கள் என்று அரசுக்கு நிபுணர்கள் ஆலோசனை வழங்குகின்றனர்.

உலகில் என்றுமே தமிழினம் யாருக்கும் அடிமையாகாத நிலைக்கான அடித்தளத்தை நாம் உருவாக்கிச் செல்வோம் என்று தலைவர் கூறியுள்ளார்.

இதனாலேயே தலைவரை அழிப்பதற்கு இந்தியாவும் வேறு சில சக்திகளும் முனைந்து நிற்கின்றன.

ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டம் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதற்கு சரியான வரைவிலக்கணம் தேசியத்தலைவர் பிரபாகரனால் உலகவரலாற்றுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

''தமிழினத்தின் கடந்த 2ஆயிரம் ஆண்டு கால வரலாற்றை நான் படித்துள்ளேன்'' புறநானூற்றைப் படித்துள்ளேன் பிரபாகரனைப்போல் ஒரு மாவீரன் இதுவரை தோன்றவில்லை.— என்று தமிழறிஞர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் தெரிவித்திருக்கிறார்.

12 லட்சம் பேரை தனது படையில் கொண்டுள்ள — உலகின் நான்காவது பெரிய வல்லரசு என்று கருதப்படும் — நாட்டுக்கு எதிராகத் துணிந்து போர் தொடுக்க தலைவர் பிரபாகரன் முடிவு செய்து அதனைச் [illegible] புரிந்து காட்டினார். [illegible] னால்தான் அவரை மாவீரன் என்று தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதன் கூறியிருக்க வேண்டும்.

''வெரித்தாஸ்'' வானொலி அண்மையில் தனது நேயர்களிடையே கேள்வி - பதில் நிகழ்ச்சி ஒன்றை நடத்தியது.

மனிதர்களை நீடூழி வாழ வைக்கும் அதிசய நெல்லிக்கனி உங்களுக்குக் கிடைத்தால் அதனை யாருக்குக் கொடுப்பீர்கள் எனக் கேட்ட போது —

உலகம் முழுவதிலும் இருக்கும் தமிழர்களில் பெரும்பாலானோர் தலைவர் பிரபாகரனுக்கு அதனைக் கொடுப்போம் எனப் பதிலளித்தார்கள்.

பெற்ற தாயே கண்கண்ட தெய்வம். பெற்ற தாய்க்கு ஒப்பானது இல்லை. எனினும் பெற்ற தாயிலும் உயர்ந்தது தாய்நாடு. தாய் நாட்டின் அடிமை விலங்குடைக்க போராடுகின்ற தலைவன் உயர்வானவன். அதனால் தான் அதிசய நெல்லிக்கனியை பெற்ற தாயை விட தலைவனுக்கே கொடுக்க வேண்டும் என உலகத் தமிழினம் முடிவு செய்தது.

உலகத் தமிழினத்தின் தலைவராக பிரபாகரன் விளங்குகின்றார் என்பது இதனால் வெளிப்படுத்தப் படுகின்றது.

தமிழனுடைய வரலாற்றிலே இராஜ இராஜ சோழனின் காலமே ஒளிமயமான காலம் என்று கூறுவர். ஆனால் அவனும் ஆரிய மாயைக்கு அடிமைப்பட்டவனே. பெற்றோர்தனக்குச் சூட்டிய ''அருள் மொழி'' என்ற தூய தமிழ்ப் பெயரை முடிசூடும் போது ''இராஜ இராஜ சோழன்'' என்ற ஆரியப் பெயருக்கு மாற்றினான்: ஆரிய வழிபாட்டு மாயைக்கும் அவன் அடிபணிந்தான்.

ஆனால் யாருக்கும் மண்டியிடாத தலைவர் பிரபாகரன் இன்று தமிழருக்கு தலைமை வகித்துப் போரை நடத்துகின்றார்.

ஈழத் தமிழினம் விடுதலை பெறுவதன் மூலம் உலகத் தமிழர் முழுவதுமே விடுதலை பெற்றவர்களாகுகின்றனர்.

எனவே உலகத் தமிழினத்தின் விடுதலைக்கு வழிகாட்டியாக பிரபாகரன் விளங்குகின்றார். [illegible]

# புளொட் எம். பியின் மெய்ப்பாதுகாவலர் கைது!

கொழும்பு, ஜூலை 24

புளொட் எம். பி. சித்தார்த்தனின் மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவர் கைத்துப்பாக்கி வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இருந்து எம். பிக்களின் வாசஸ்தலத்துக்கு சித்தார்த்தன் காரில் சென்று கொண்டிருந்த போது மெய்ப்பாதுகாவலர் பின்னால் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தாராம்.

வழியில் அவரை மறித்து சோதனையிட்ட பொலீஸார் அவரிடம் கைத்துப்பாக்கி ஒன்று இருப்பதைக் கண்டு அவரைக் கைது செய்தனர். [ஐ]

# அரசு எதிர்நோக்கும் நிதிப் பற்றாக்குறை

கொழும்பு, ஜூலை 24

விடுதலை புலிகளுக்கு எதிராகத் தொடங்கியுள்ள போரினால் ஸ்ரீலங்கா அரசு கடுமையான நிதிப் பற்றாக்குறையை எதிர்கொள்வதாக பொருளாதார ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

போரினால் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும்—

இதனையடுத்து தனியார் துறையினரிடமிருந்து ஸ்ரீலங்கா அரசு கடன் வாங்கும் நிலை உருவாகியுள்ளதாகவும் —

அரசு சார்பில் வெளியாகும் பத்திரிகைகளும் தகவல் வெளியிட்டன என்று வெரித்தாஸ் வானொலி குறிப்பிட்டது. (உ-4)

# ரஜனிகாந்தின் உரையால் அ. தி. மு. கவில் சலசலப்பு

## வீரப்பனுக்கு நெருக்கடி

சென்னை, ஜூலை 24

அமைச்சர் ஆர். எம். வீரப்பன் அமர்ந்திருந்த மேடையில் வைத்து தமிழக முதல்வர் ஜெயலலிதாவை நடிகர் ரஜனிகாந் குறை கூறியது தமிழக அரசியலில் புதிய மோதல் நிலையை உருவாக்கி இருப்பதாக பி. பி. ஸி தெரிவித்தது.

தமிழகத்தில் குண்டு வெடிப்புக்களும் கோஷ்டிச் சண்டைகளும் மலிந்து விட்டன என்றும் அவற்றை அடக்கும் வகையில் பொலிஸாருக்கு சுதந்திரம் இல்லை என்றும் ரஜனிகாந் கூறி இருந்தார்.

ரஜனிகாந் முதல்வரை குறித்துப் பேசிய போது அதே மேடையில் இருந்த மூத்த அமைச்சர் ஆர். எம். வீரப்பன் முதல்வரின் நடவடிக்கைகளை நியாயப்படுத்திப் பேசத் தவறியது குறித்து அ. தி. மு. கழக எம். எல். ஏக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். [இ-4]

## நல்லூர் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தேர்த் திருவிழா 24ஆம் திகதியும், தீர்த்தத்திருவிழா 25ஆம் திகதியும் இடம் பெறும். [க-எ-111]

## நிவாரண பொருள்கள்

வலி. தெற்கு, ஜூலை 24

வலிகாமம் தெற்கு பிரதேச சபை பிரிவில் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கான ஒரு வாரத்துக்கான நிவாரணப் பொருள்களை சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினர் வழங்கி வருகின்றனர்.

இச்சங்கத்தால் இணுவில் கந்தசாமி கோவில் சந்தியில் திறக்கப்பட்டுள்ள விற்பனை நிலையத்தில் வைத்து இப்பொருள்கள் வழங்கப்படுகின்றன.

அத்துடன் அ, உ பங்கீட்டு அட்டைகளுக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கக் கிளைகள் மூலம் ஐந்து கிலோ மாவும் வழங்கப்படுகின்றது. [க-152]

## அரசியல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடவடிக்கை குறித்து அனுபவமும் ஆற்றலும் மிக்கவர்கள் மத்தியிலும் அது குறித்து சந்தேகம் நிலவுவதாக பி.பி.ஸி குறிப்பிட்டது.

பி.பி.ஸி. பேட்டியில் ஹரி குணதிலக கூறியதாவது:-

தரை வழியாகப் பொருள்களை விநியோகிக்கும் பாதை ஒன்றைக் கைப்பற்றவே இராணுவ நடவடிக்கை திட்டமிடப்பட்டது. அதற்காகவே 78 சதுர கிலோ மீற்றர் பிரதேசம் கைப்பற்றப்பட்டது. ஆனால் அதன் பின்பும் கூட பாதுகாப்பு வேலி ஒன்றை அங்கு அமைக்க முடியவில்லை.

ஆகவே இந்த நடவடிக்கை எந்தவித பலனும் கிட்டவில்லை.

அரசியல் திட்டமே

இது ஓர் இராணுவத் திட்டமா என்பதில் எனக்குச் சந்தேகமுண்டு. இது ஓர் அரசியல் திட்டமே தவிர வேறில்லை.

ஜூலை 15 ஆம் திகதி குறிப்பிட்டு வழங்கப்பட்ட — நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்துக் கட்டும் — வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போனதால் —

அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைத் திசை திருப்பவும், விடுதலைப்புலிகளுக்கு தொடர்ந்து கிடைத்து வந்த வெற்றிகளில் அரசுக்கு ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிக்கவும் —

அரசியல்வாதிகளால் வகுக்கப்பட்ட ஒரு திட்டமே இந்த நடவடிக்கையாகும்.

ஜூன் 28 ஆம் திகதி இடம் பெற்ற மண்டைதீவுத் தாக்குதலில் இராணுவம் படுதோல்வியடைந்து, மனோநிலை குன்றியிருந்த வேளையில் அவசரப்பட்டு இவ்வளவு விரைவில் ஏன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

அரசு ஏதோ செய்வதாக தெற்கு சிங்கள மக்களுக்குக் காட்டவே இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டது

முப்படை வீரர்களைப் பொறுத்தவரை இந்த அரசியல் நடவடிக்கை படுபாதகமான ஒரு செயலாகும். — என்றார். (உ-3-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகம் பகுதியில் ஷெல்லுக்கு இருவர் காயம்

அளவெட்டியில் நிலைகொண்டுள்ள இராணுவம் சுன்னாகம் பகுதியை நோக்கி மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் இருவர் படுகாயமடைந்தனர். வீடுகள் சில பலத்த சேதமடைந்தன.

சுன்னாகம் மயிலணியில் நேற்றுக் காலை 11-30 மணிக்கு விழுந்து வெடித்த ஷெல்லினால் அவ்விடத்தைச் சேர்ந்த அருணைமக்கிளி அருணா (வயது 13), மல்லாகத்தில் இருந்து இடம் பெயர்ந்து மயிலணியில் வசித்துவந்த சின்னத்தம்பி சிவலிங்கம் (வயது 50) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [ஐ-15-13]

## இலங்கை அரசின் தடையை எதிர்த்து துறைமுக ஊழியர்கள் சென்னையில் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 24

இந்திய வள்ளங்கள் கொழும்பு துறைமுகத்தினுள் செல்ல இலங்கை அரசு தொடர்ந்து மறுத்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தின் முன்னால் இந்திய தொழிற் சங்கத்தினர் கடந்த புதனன்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சுமார் 400 துறைமுக தொழிலாளர்கள் அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்திய வள்ளங்கள் மூலம் விடுதலைப் புலிகள் கொழும்புத்துறை முகத்துக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக இந்தியவள்ளங்களுக்கு கடந்த ஏப்ரல் முதல் இலங்கை அரசு தடைவிதித்துள்ளது. [ஐ]

## நாட்டுப்பற்றாளர் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 24

சண்டிலிப்பாய் பகுதியில் கடந்த 9 ஆம் திகதி படையினரின் தாக்குதலினால் நாட்டுப்பற்றாளரான கனகசபாபதி கோகுலதாஸன் (தொல்புரம் கிழக்கு) கொல்லப்பட்டார். (ஐ)

## ஆபத்தை அறியும் நவீன கருவிகள் 'எடித்தரா'வில் இருக்கவில்லையாம்

கொழும்பு, ஜூலை 24

"கடற் கண்ணிகள், நீரின் அடியில் ஏற்படும் ஆபத்துக்கள் ஆகியவற்றை நேரகாலத்துடன் கண்டறியத் தேவையான உபகரணங்கள் இல்லாமையே ''எடித்தரா'' கப்பல் மூழ்கடிக்கப்பட்ட தற்கான காரணம்.''

இவ்வாறு மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ''திவயின'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் சூரியா, ரணசுரு ஆகிய கப்பல்கள் தகர்க்கப்பட்டபோது "சோனார்" உபகரணம் உட்பட பல உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படவேண்டுமென விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது,

இவ் உபகரணங்களைப் கொள்வனவு செய்ய 30லட்சம் ரூபா போதுமானதாகும்.

ஆனால் இவ் உபகரணங்களைப் பெற முயற்சிஎடுக்கப்படாததால் தற்போது 25 மில்லியன் ரூபா பெறுமதியான 'எடித்தரா'வை இழக்க நேரிட்டது எனவும்—

இவ் உபகரணங்களைக் கொள்வனவு செய்யாவிடின் இனிமேலும் இவ்வாறான இழப்புக்களைத் தடுக்க முடியாது என்றும் அந்த அதிகாரி கூறியதாக ''திவயின'' மேலும் தெரிவித்துள்ளது. (எ-10)

## படையெடுப்பை தடுத்து நிறுத்த வீட்டுக்கு ஒருவர் ஆயுதம் ஏந்துக!

### வெகுஜன அமைப்பு ஒன்றியம் அறைகூவல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

இராணுவம் தனது தோல்வியை மறைப்பதற்காக மீண்டும் பெரும் தாக்குதலுக்குத் தயாராகிறது. இந்த நேரத்தில் எதிரியின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த வீட்டுக்கு ஒருவர் ஆயுதம் ஏந்திப் போராட முன்வர வேண்டும்.

இவ்வாறு வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் நேற்று விடுத்த பத்திரிகை அறிக்கை ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்தது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

எதிரி யாழ் குடாவைக் கைப்பற்றி தமிழின அழிப்பை மேற்கொள்ள 15 ஆயிரம் துருப்புக்களை பயன்படுத்தினான். தொடர்ச்சியாக ஐந்து நாள் படையெடுத்து பாரிய அழிவுகளை ஏற்படுத்தினான். ஆனால் எமது தேசிய தலைவரின் வழிகாட்டலில் இராணுவ தந்திரோபாயங்களினால் முழுப்படைகளும் விரட்டியடிக்கப்பட்டன. இது எமது மண் மீட்பு போராட்டத்தில் புதிய வரலாற்றுப் பரிமாணமாகும்.

எமது எல்லைப் புறங்களில் ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் எக்காளம் எங்கும் எதிரொலிக்கிறது. எதிரியின் போர் ஆயுதங்கள் எம் இனத்தை அழிக்கக் காத்திருக்கின்ற வேளையிது. இன்னும் ஏன் தயக்கம்? எழுந்து வாருங்கள் எதிரியை விரட்டுவோம்.

துறைசார்ந்த பங்களிப்பின் மூலம், பின்தள ஒத்துழைப்பின் மூலம், முனைப்பாகச் செயற்பட்டு எம்மை நாமே தற்காத்து எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை உறுதி செய்வோம். அழிக்கவரும் எதிரியை எமது மண்ணிலிருந்து முற்றாக விரட்டுவோம் வாருங்கள் என்று அறைகூவல் விடுக்கின்றோம். என்று உள்ளது. (அ)

## பன்குடாவில் விமானத் தாக்கு!

கொழும்பு, ஜூலை 24

மட்டக்களப்புக்கு மேற்கே உள்ள படுவான் கரையில் பன்குடா வெளிப் பகுதியில் நேற்று முன் தினம் காலை விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது.

காட்டுப் பகுதிகள் மீது விமானங்கள் குண்டுகளை வீசியதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஐ]

## பொலீஸ் காவலரண்கள் மீது தாக்குதல்

கொழும்பு ஜூலை 24

மட்டக்களப்பு மாவட்டம் செட்டிபாளையம், மீராவோடை ஆகிய இருஇடங்களிஉள்ள பொலீஸ் காவலரண்கள் மீது கடந்த திங்கட்கிழமை இரவு விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் இரு பொலீஸார் காயமடைந்தனர் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

உடுவில், தெல்லிப் பளை கல்விக்கோட்டத்துக்கு உட்பட்ட அதிபர்கள் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று திங்கள் பிற்பகல் 2 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. [ஐ]

## வழக்கு நடவடிக்கைகள்

சுன்னாகம் தமிழீழ மாவட்ட நீதிமன்றில் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த வழக்கு நடவடிக்கைகள் மீண்டும் இன்று திங்கட்கிழமை முதல் வழமைபோல் இயங்கும் என தமிழீழ நீதி நிர்வாகத் துறையினர் அறிவித்துள்ளனர். [எ]

## செல்லக்கிளி அம்மானுக்கு உணர்வுபூர்வ அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை. 24

லெப்டினென்ட் செல்லக்கிளி அம்மானின் பன்னிரண்டாவது நினைவு தினம் நேற்று எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. மக்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டு உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

திருநெல்வேலி தபாற் பெட்டிச் சந்தியில் அமைந்துள்ள செல்லக்கிளி அம்மானின் நினைவுத் தூபியில் நேற்றுக் காலை 9 மணிக்கு அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

போராளிகளும் பெரும்எண்ணிக்கையான பொதுமக்களும் நினைவுத் தூபியில் மலர் அஞ்சலி செலுத்தினர்.

நேற்றுக்காலை 10 மணிக்கு கல்வியங்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள செல்லக்கிளி அம்மானின் நினைவாலயத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

நினைவாலயத்தில் உள்ள அன்னாரது உருவப்படத்திற்கு தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு.வே. இளங்குமரன் மலர்மாலை சூட்டினார்.

முன்னதாக தமிழீழ மாவீரர் பணிமனை துணைப் பொறுப்பாளர் செல்வி அர்ச்சுனா, செல்லக்கிளி அம்மானின் சகோதரர் திரு. இராசரத்தினம் ஆகியோர் ஈகச் சுடர் ஏற்றினார்கள்.

மேற்படி நினைவாலயத்தில் கடற்புலிலெப்டினன்ட் மகான் லெப்டினன்ட் நற்குணம் (நிரேட்ராஜன்) வீரவேங்கை சேகர் இரண்டாம் லெப்டினன்ட் ஞானமூர்த்தி ஆகியோரின் உருவப்படங்களும் திரை நீக்கம் செய்யப்பட்டன. அவற்றுக்கு அவர்களது பெற்றோர்கள் மலர்மாலை சூட்டி அஞ்சலிசெலுத்தினார்கள். அதன் பின்னர் போராளிகள், பொது மக்கள் உட்பட பலரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

### கிளிநொச்சியில்

கிளிநொச்சியில் லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மானை நினைவு கூரும் நிகழ்ச்சிகள் கலைக் கல்லூரியில் இடம் பெற்றது.

நேற்றுக்காலை 11 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் நீகன், வன்னிப்பகுதி கலை பண்பாட்டுப் பொறுப்பாளர் செல்வமாமா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். (அ-111-3)

## தேசிய முன்னணியில் பிளவு தி.மு.க. வெளியேறியது

சென்னை, ஜூலை 24

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் தேசிய முன்னணியுடன் இருந்த தமது உறவை துண்டித்துக் கொண்டுள்ளது.

தேசிய முன்னணியின் சில தலைவர்கள் முதல்வர் ஜெயலலிதாவின் தலைமையில் இயங்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை தங்களுடன் சேரும்படி அழைப்பு விடுத்திருப்பதையடுத்து திராவிட முன்னேற்றக் கழகம் தேசிய முன்னணியில் இருந்து விலகியுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம் தேசிய முன்னணியுடன் கூட்டணியாக இருக்கும் போது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு தேசிய முன்னணி அழைப்பு விடுத்திருப்பது தமக்கு அதிருப்தியை அளித்திருப்பதாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் மாலை சென்னையில் தெரிவித்தார்.

தேசிய முன்னணியின் இச்செயல் தம்மை இழிவுபடுத்தும் விதத்தில் அமைந்துள்ளதாக கருணாநிதி தேசிய முன்னணியினரை குற்றம் சாட்டியுள்ளார்.

அ.தி.மு. கழகத்தை கூட்டணியாக இணைத்துக் கொள்வதன் மூலம் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க முடியுமென தேசிய முன்னணியின் தலைவர்கள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லம்மா பொன்னையா (சுப்பிரமணியம்)

திருமதி நல்லம்மா பொன்னையா [சுப்பிரமணியம்] [சாவகச்சேரி வடக்கு, மடத்தடி] 23-07-1995இல் காலமாகிவிட்டார்.

இவர் விநாசித்தம்பி பொன்னையாவின் (சுப்பிரமணியம்) அன்பு மனைவியும். துரைசிங்கம் (CTB) மங்கையர்க்கரசி, சிவநாதன் (கண்டாவளை) மகேஸ்வரி, அழகரத்தினம், கோபாலகிருஷ்ணன், [ஜேர்மனி) தனபாலகிருஷ்ணன் (கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரி, V P. தியாகராசா [அமைப்பாளர், காப்புறுதிக்கூட்டுத்தாபனம்) ராணி [கண்டாவளை), க. நவரத்தினம், ரஜிதா [ஜேர்மனி], புனிதா (கனடா] ஆகியோரின் பிரியமுள்ள மாமியாருமாவார் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பொ. அழகரத்தினம் (மகன்)
Lion V. P. தியாகராசா (மருமகன்)

லக்ஷ்மி,
மடத்தடி,
சாவகச்சேரி வடக்கு. [37692]

### இளையதம்பி சுப்பிரமணியம்

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், மன்னார் கள்ளிக்கட்டை காடு, உயிலங்குளத்தை வசிப்பிடமாக கொண்டவரும் தற்பொழுது இல 35, சிவகுருநாதர் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான இளையதம்பி சுப்பிரமணியம் 23-07-95 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், பாக்கியலெட்சுமி, கிருஷ்ணபிள்ளை [பாலகிருஷ்ணன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தி பாலசிங்கம் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்), லீலாவதி ஆகியோரின் மாமனாரும், குகபாலன் (கனடா), குகரூபன் (கனடா), பாலகௌரி (டென்மார்க்), அசோககுமார் (பிரான்ஸ்), குகநேசன், வரதகுமார், மனோதரன் (மாணவன் - யாழ் மத்திய கல்லூரி) சசிரேகா, (மாணவி - யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), தாட்சாயினி (மாணவி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), சாரங்கனி [மாணவி - யாழ். இந்து மகளிர் கல்லூரி), வைதேகி, சசிகலா (கொழும்பு', சுரேந்தினி (கனடா), சிவலிங்கம், (டென்மார்க்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [24-7-95] திங்கட்கிழமை மு.ப 10-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அனைவரும் இதனை ஏற்றுக்கொள்ளுமாறு வேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
க. பாலகிருஷ்ணன்
[மகன்]

35, சிவகுருநாதர் வீதி,
பிறவுண்றோட்
யாழ்ப்பாணம். [37693]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292இல் உள்ள அச்சகத்தில் 24-07-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org